திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கன்னியாகுமரி ஜில்லாவிலே இப்போது ரி-சர்வே முடிந்து விட்டது. இப்போது முன்னே இருந்த ரெவின்யூ ரெக்கார்டுகளை எல்லாம் டிஸ்ட்ராய் செய்யவேண்டுமென்று போர்டு ஆப் ரெவின்யூவில் இருந்து ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அந்த மாதிரி ரெக்கார்டுகளை டிஸ்ட்ராய் செய்தால் பேராபத்து ஏற்பட்டுவிடும். ஆகவே, அந்த உத்தரவை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையைக் கருத்தில் எடுத்துக் கொள்ளலாம்.

Thiru K. VINAYAKAM : Sir, with due deference to the Hon. Minister for Food, may I draw your attention to the fact that the word ' cadastral ' means what I stated. Of course, it is a foreign word and I depend upon the dictionary for its elucidation and it is not correct when the Hon. Minister says that ' cadastral ' means initial survey. So, will the Hon. Minister take steps to find out from the files or whatever records he has in his possession and rectify the mistake in regard to this matter ?

The Hon. Thiru K. A. MATHIALAGAN : The answer is very clear. The word ' cadastral ' is applicable to lands which have not been surveyed. The present method is done by diagonal and offset system and the old system has become obsolete.

எண்ணமங்கலம் பால் பண்ணைத் திட்டம்.

***130 வின.—திரு. ஈ. எம். நடராசன்:** மாண்புமிகு உணவு—வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தாலூகா, எண்ணமங்கலம் கிராமத்தில் பால் பண்ணைத் திட்டத்திற்காக பாரஸ்டு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதா ?

(இ) இப்பொழுது அந்தப் பால் பண்ணைத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) அன்டு (இ) கோயம்புத்தூர் மாவட்டம், பவானி வட்டம், எண்ணமங்கலம் கிராமத்தில் பால் பண்ணை ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

திரு. ஈ. எம். நடராசன் : பால் பண்ணைக்காக அந்த இடத்தில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த இடத்தில் தற்போது பால் பண்ணை செயல்படவில்லை. அந்த இடத்திலே தற்போது எள், சோளம் போன்ற பயிர்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுத்து அந்த இடத்தில் பால் பண்ணை வைத்து நடத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அப்படிப்பட்ட செயற்குறிப்பு ஒன்றும் இல்லை.

டோரிஸ் படகுகள்.

***131 வின.—திரு. டி. மார்டின் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டோரிஸ் திட்டத்தின் அடிப்படையில் நடப்பு ஆண்டில் அரசு ஏதேனும் விசைப்படகை பிரான்சு நாட்டிலிருந்து பெற்றுக்கொண்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?